## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### 1984 மார்ச் 20 செவ்வாய்க்கிழமை

### பங்குனி ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்;

''பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்''.

வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### காஞ்சிபுரம் தாலுகா விவசாயிகள் மின் இணைப்புப் பெற வாங்க வேண்டிய தகுதிச் சான்றிதழ்

349—(*வினா எண். 19573)—திரு. ப. வெங்கட சுப்பிர மணியம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தாலுகா விவசாயிகள் மின் இணைப்புப் பெற வேண்டுமென்றால் (Palar Clerance Certificate) வாங்க வேண்டுமென கட்டாயப்படுத்தப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இம்முறையை நீக்க வேண்டுமெனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனரா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலாற்றுப் படுகை என்பது வடாற்காடு, செங்கற்பட்டு ஆகிய இரண்டு மாவட்டங்களிலுள்ள விவசாயி களுக்கு பாதகமாக அமைந்துள்ளது. பாலாற்றுக்கரைப் பகுதி தவிர, வெகு தொலைவிலுள்ள விவசாயிகள் கூட இந்தச் சான்றிதழ் பெறாத காரணத்தினால், புதிய மின் இணைப்பு பெறுவதில் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அதை நீக்கு வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளடைவில் பாலாற்றுப் படுகையில் நீர் ஊற்று வளம் வெகுவாகப் பாதிக்கும் என்பதனால், அந்தப் பாலாற்றுப் படுகை அனுமதிச் சான்றிதழை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்ற பிறகு தான் மின் இணைப்பை வழங்கவேண்டியுள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, இந்த 'பாலாறு கிளியரன்ஸ் சர்டிபிகேட்' என்பது அந்தப் படுகையிலே கேட்பது நியாயம். ஆனால் பல இடங்களில் பாதிக்கப்படாத பகுதி வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. இந்தப் பாதிக்கப்படாத பகுதி 10, 12 மைல்களுக்கு அப்பால் இருக் கிறது. அவைகளை எல்லாம் பரிசீலனை செய்வதற்கு, அரசு கமிட்டி அமைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உயர் அதிகாரிகளைக் கலந்து, 'கிளியரன்ஸ் சர்டிபிகேட்டை' விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நிலத்தடி நீர்த் துறை என்று ஒன்று உள்ளது. அந்தத் துறையினால், நிலத்தடி நீர் அனுமதி வழங்கப்பட்ட பகுதியில், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பாலாற்றுப் பகுதியில் அனுமதிச் சான்றிதழ் கொடுக்கப்படுகிறது. பாலாற்றினால், பாதிக்கப்படாத பகுதி கள் என்றால் இந்த நிலத்தடி நீர்த் துறை சான்றிதழ் வழங் கும்

1984 மார்ச் 20]

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, இதே பாலாற்றுப் படுகை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரிடம் கேள்வி கேட்டபோது அதை ரத்து செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை அணுக வேண்டும் என்று சொன்னார்கள். வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு, அதற்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே, இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் ஏதாவது அறிவிப்பை இப்போது செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நீர்ப்பாசனத் துறை சம்பந்தப்பட்டது.

தொழில் அதிபர்கள் தாங்களே மின் உற்பத்தி நிலையம் அமைத்துக் கொள்ள அனுமதி அளிக்கும் திட்டம்

350—(*வினா எண். 19651)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்சாலை அதிபர்கள் தாங்களே மின் உற்பத்தி நிலையம் அமைத்துக்கொள்ள உரிமை கோரி விண்ணப்பித்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 169.05 கோடி செலவில் 110 மெ. வாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றை சென்னை அருகே கூட்டுமுறையில் நிறுவ உத்தேசித்துள்ளதாகவும் அதற்கு அனுமதி கோரியும் சென்னையில் உள்ள தொழில் அதிபர்கள் ஒரு திட்ட அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். இத்திட்ட அறிக்கை மீது மத்திய அரசின் அனுமதி கோரி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சென்னை மற்றும் இதர இடங்களிலே, வேறு தொழிலதிபர்கள் மின் உற்பத்தி நிலையம் வைத்துக் கொள்வதற்கு ஏதேனும் அனுமதியை அரசிடம் கோரியிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதுவரையில் வந்துள்ளது இது ஒன்றுதான்.